# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

---

*(2007 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 09 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2007, ஒற்றோபர் மாதம் 12 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா 14.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்**

[*2007 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 09 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.ஒ. 16/2007*

**புலனாய்வுகளை நடத்துவதற்கு வசதியளிப்பதற்காக பிடியாணையின்றிக் கைதுசெய்யப்பட்டவர்களின் தடுப்புக் காலப்பகுதியை நீடிப்பதற்கும், குறித்தசில வழக்குகளில் சுருக்க முறையற்ற விசாரணையை நடத்துவதனைத் தவிர்ப்பதற்கும் ஏற்பாடுசெய்வதற்கும், வழக்குத்தொடுநருக்கான சாட்சிக்காரர்களின் சத்தியத்தின்மீதான வாக்குமூலத்தை எடுப்பதற்கு ஏற்பாடுசெய்வதற்கும் ; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டம்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக* **:-**

*சுருக்கப்பெயர்.*

***1.*** *இச்சட்டம் 2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.*

*கைதுசெய்யப்பட்ட ஆளைத் தடுத்துவைக்கும் காலப்பகுதி குறித்தசில விடயங்களில் இருபத்துநான்கு மணித்தியாலங்களுக்கு அல்லது நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்கு மேற்படுதலாகாது.*

***2.*** *ஆயிரத்துத் தொளாயிரத்து எழுத்தொன்பதாம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 43(அ) என்னும் பிரிவின் ஏற்பாடுகளைத் தவிர, அச்சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், எவரேனும் சமாதான அலுவலர், பிடியாணையொன்றில்லாமல் கைதுசெய்யப்பட்ட ஆளொருவரை விடயத்தின் எல்லாச் சூழ்நிலைகளின்கீழும் நியாயமானதைவிட நீண்டவொரு காலப்பகுதிக்கு கட்டுக்காவலில் தடுத்துவைத்தலோ அல்லது வேறுவகையில் மறித்துவைத்தலோ ஆகாது என்பதுடன், அத்தகைய காலப்பகுதியானது கைதுசெய்யப்பட்ட இடத்திலிருந்து நீதிவான் முன்னிலைக்கு பிரயாணம்செய்வதற்கு அவசியமான நேரம் நீங்கலாக இருபத்து நான்கு மணித்தியாலங்களை விஞ்சுதலாகாது* **:**

*ஆயினும், கைதுசெய்தலானது இச்சட்டத்திற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறான தவறு தொடர்பிலானதாக இருக்குமிடத்து, பொலிசு கட்டுக்காப்பில் அத்தகைய தடுப்புக் காலப்பகுதியானது, கைதுசெய்யப்பட்ட ஆள்*

அவர் முன்னிலையில் முன்வைக்கப்படுவதன்மீதும் மேலும் புலனாய்வுகளின் நோக்கத்திற்கு அத்தகைய ஆளைத் தடுத்துவைப்பது அவசியம் என்ற பயன்பட சொல்லப்பட்ட இருபத்துநான்கு மணித்தியாலங்களைக் கொண்ட காலப்பகுதி முடிவடைவதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்படும் உதவிப் பொலிசு கண்காணிப்பாளரின் பதவி வரிசைக்குக் குறையாத பொலிசு அலுவலரொருவரால் கோப்பிடப்பட்ட சான்றிதழொன்றின்மீதும் அதன் சார்பில் நீதிவானால் ஆக்கப்பட்ட கட்டளையொன்றின் மேல் இருபத்துநான்கு மணித்தியாலங்களை விஞ்சாத மேலுமொரு காலப்பகுதிக்கு நீடிக்கப்படலாம். ஆயினும், தடுத்துவைத்தலின் கூட்டுமொத்தக் காலப்பகுதி நாற்பத்தெட்டு மணித்தியாலங்களை விஞ்சுதலாகாது.

ஆயினும், மேலும், மேலுமொரு காலப்பகுதியொன்றுக்கு கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்ட எவரேனும் ஆளுக்கு அத்தகைய தடுப்புக் காலத்தின்போது அவர் விரும்பும் சட்டத் தரணியைக் கலந்தாலோசிப்பதற்கும் அவர் விரும்பும் எவரேனும் உறவினருடன் அல்லது நண்பருடன் தொடர்புகொள்ளுவதற்கும் சந்தர்ப்பமொன்று செய்துகொடுக்கப்படுதல் வேண்டும்.

மோசமடையும் சூழ்நிலைகளில் புரியப்படும் தவறின் விடயத்தில் நேரடிக் குற்றப்பகர்வு.

**3.** (1) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தில் அடங்கியுள்ளது எது எவ்வாறிருப் பினும் மோசமடையும் சூழ்நிலைகள் அல்லது 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்திற்கான இரண்டாம் அட்ட வணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தவறைப் புரிதல் தொடர்பில் பொதுமக்களின் அமைதியைக் குழப்பத் தூண்டும் சூழ்நிலைகள் நிலவுமிடத்து, குற்றப்பகர்வை நேரடியாக மேல் நீதிமன்றத்திற்கு அனுப்புவது சட்டத்துறை தலைமையதிபதிக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) சட்டத்துறைத் தலைமையதிபதி (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி குற்றப்பகர்வை நேரடியாக அனுப்புகையில், தன்னியக்கத்தால் அல்லது இயைபான பதிவேடு நீதிவானிட மிருந்து கிடைக்கப்பெற்றதன்மீது அவ்வாறு செய்யமுனைதல் வேண்டும்.

நீதிவான் பதிவேட்டைச் சட்டத்துறைத் தலைமை யதிபதிக்கு அனுப்புதல்.

**4.** (1) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தில் அடங்கியிருப்பது எது எவ்வாறிருப் பினும் 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட

தவறொன்றைப் புரிதல் தொடர்பில் மோசமடையும் சூழ்நிலைகள் அல்லது பொதுமக்களின் அமைதியைக் குழப்பத் தூண்டும் சூழ்நிலைகள் இருக்குமிடத்து, நீதிவான் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் அத்தியாயம் XVஇன் நியதிகளின்படி பூர்வாங்க விசாரணையொன்றை நடத்துதலாகாது என்பதுடன், நடவடிக்கைகளின் பதிவேட்டைச் சட்டத்துறைத் தலைமையதி பதிக்கு உடனடியாக அனுப்புதலும் வேண்டும். அத்துடன், அதன் பின்னர் சட்டத்துறைத் தலைமையதிபதியின் அறிவுறுத்தல்களின் படி செயற்படுதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நியதிகளின்படி நடவடிக்கைகளின் பதிவேடு நீதிவானால் கிடைக்கப்பெற்றதன்மீது சட்டத்துறைத் தலைமையதிபதி -

(அ) மோசமடையும் சூழ்நிலைகள் அல்லது மேற்சொல லப்பட்ட தவறுபுரிதல் தொடர்பில் பொதுமக்களின் அமைதியைக் குழப்பத் தூண்டும் சூழ்நிலைகள் இருப்பதாக அவர் அபிப்பிராயப்படுமிடத்து குற்றப் பகர்வை நேரடியாக மேல்நீதிமன்றத்திற்கு அனுப்புதல் வேண்டும் ;

(ஆ) சூழ்நிலைகள் குற்றப்பகர்வை நேரடியாக மேல் நீதிமன்றத்திற்கு அனுப்பப்படுவதைத் தேவைப்படுத்த வில்லை என அவர் அபிப்பிராயப்படுமிடத்து, பதிவேடுகள் கிடைக்கப்பெற்றதிலிருந்து முப்பது நாட்களுக்குள் அவற்றை நீதிவானுக்குத் திருப்பி யனுப்புதல் வேண்டும் என்பதுடன் பூர்வாங்க விசாரணையொன்று 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் அத்தியாயம் XVஇன் நியதிகளின்படி நடைபெறவேண்டுமெனப் பணித்தலும் வேண்டும்.

(3) நீதிவான், மேற்கூறப்பட்ட சட்டக்கோவையின் அத்தியாயம் XV என்பதன் நியதிகளின்படி பூர்வாங்க விசாரணையொன்றை நடத்த முன்வருவாராயின், சட்டத்துறைத் தலைமையதிபதி, குற்றப்பகர்வை மேல்நீதிமன்றத்திற்கு நேரடியாக அனுப்புதனைக் கருத்திற்கொள்ளும் நோக்கத்திற்கு வழக்கு நடவடிக்கையின் பதிவேட்டைக் கோருதல் வேண்டும். அத்தகைய விடயத்தில்

நீதிவான் வழக்கு நடவடிக்கைகளை உடனடியாக இடைநிறுத்தம் செய்து வழக்கு நடவடிக்கைகளின் பதிவேட்டைச் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு அனுப்புதல் வேண்டும். அத்துடன், அதன் பின்னர் சட்டத்துறைத் தலைமையதிபதியின் அறிவுறுத்தல்களின் படி செயற்படுதலும் வேண்டும்.

வழக்கு நடவடிக்கைகள் தொண்ணூறு நாட்களுக்குள் முடிவுறுத்தப்படுதல் வேண்டும்.

**5.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி எவையேனும் வழக்கு நடவடிக்கைகள் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் அத்தியாயம் XV என்பதன்கீழான வழக்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட தேதியிலிருந்து தொண்ணூறு நாட்களைக் கொண்டவொரு காலப்பகுதிக்குள் முடிவுறுத்தப்படுதல் வேண்டும்.

சத்தியத்தின் மீதான வாக்குமூலம்.

**6.** (1) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் அத்தியாயம் XV என்பதில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், மேற்கூறப்பட்ட அத்தியாயத்தின்கீழ் விசாரணையொன்றை நடத்துகையில், நிகழ்வுகளும் சூழ்நிலைகளும் தெரிந்த ஆட்களின் கூற்றுக்களை எடுப்பதற்கு பின்வரும் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய நீதிவான், 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் அத்தியாயம் XI என்பதன் நியதிகளின்படி நடத்தப்பட்ட புலனாய்வின்போது சாட்சிக்காரரால் அளிக்கப்பட்ட கூற்றைக் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கெதிராக முன்வைக்கப்பட்ட சாட்சிக்காரர் ஒவ்வொருவருக்கும் சாட்சிக்காரரின் முன்னிலையிலும் அவருக்குக் கேட்கும் விதத்திலும் வாசித்தல் அல்லது வாசிக்கச் செய்வித்தல் வேண்டும். அத்துடன், கூற்று அவரால் பொலிசுக்குச் செய்யப்பட்ட கூற்றின் செம்மையான பதிவேடொன்றானதா என்பதையும் சாட்சியிடம் கேட்டல் வேண்டும்.

(3) (அ) சாட்சிக்காரர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவரிடம் செய்யப்பட்ட விசாரணையொன்றுக்கு மறுமொழியாக, கூற்றானது, அவர் பொலிசுக்குக் கூறியதன் செம்மையான பதிவேடொன்

றாகும் எனக் கூறுவாராயின் நீதிவான் அந்நிகழ்வைப் பதிதல் வேண்டும். நீதிவான் சாட்சிக்காரர் அவ்வாறு விரும்பினால் அவர் செய்த ஆரம்பக்கூற்றுக்கு அத்தகைய சேர்த்தல்களை அல்லது மாற்றங்களைச் செய்வதற்கு அனுமதித்தல் வேண்டும். அத்தகைய சேர்த்தல் அல்லது மாற்றம் ஒவ்வொன்றும் பதியப்படுதல் வேண்டும்.

(ஆ) நீதிவான், சாட்சிக்காரர் குற்றஞ்சாட்டப்பட்டவரால் அல்லது அவரது வழக்குரைப்பவரால் ஏதேனும் குறுக்கு விசாரணை செய்யப்படுவதனை அனுமதித்தலாகாது. ஆனால் நீதிவான், புலனாய்வின்பொழுது சாட்சிக்காரரால் செய்யப்பட்ட கூற்றிலிருந்து எழுகின்ற ஏதேனும் விடயம்பற்றி அல்லது அவரது ஆரம்பக்கூற்றுக்கான எவையேனும் சேர்த்தல்களை அல்லது மாற்றங்களைப்பற்றி, அவ்வாறு ஏதேனும் இருப்பின் குற்றஞ் சாட்டப்பட்டவரால் அல்லது அவரது வழக்குரைப்பவரால் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் விளக்கத்தைச் சாட்சிக்காரரிடம் கேட்கலாம் என்பதுடன் அத்தகைய ஏதேனும் விடயம்பற்றி நீதிவான் தாமே தேவைப்படுத்தக்கூடிய ஏதேனும் விளக்கத்தைச் சாட்சிக்காரரிடம் கேட்கலாம். அவ்வாறு செய்யப்பட்ட விளக்கம் ஒவ்வொன்றும் பதிவுசெய்யப்படுதல் வேண்டும்.

ஆயினும், பொலிசுக்குச் செய்யப்பட்ட சாட்சியொருவரின் கூற்றில் அடங்கியுள்ள விடயத்தின் தன்மையைக் கருத்திற்கொண்டு வழக்குத்தொடுநர், குற்றஞ்சாட்டப்பட்டவரால் அல்லது அவரது வழக்குரைப்பவரால் குறுக்குவிசாரணை செய்யப்படுவதற்காகச் சாட்சிக்காரரை முன்நிறுத்தலாம்.

(4) நீதிவான் அதன்பின்னர் புலனாய்வின்போது சாட்சிக்காரரால் நீதிமன்றத்திற்குச் செய்யப்பட்ட கூற்றினதும் (2) ஆம் உட்பிரிவின்கீழ் அவரால் தரப்பட்ட விளக்கங்களினதும், அவ்வாறு எவையேனுமிருப்பின், (3) ஆம் உட்பிரிவின்கீழ் அவரால் அவரது ஆரம்பக்கூற்றுக்குச் செய்யப்பட்ட சேர்த்தல்களினதும் அல்லது மாற்றங்களினதும், அவ்வாறு எவையுமிருப்பின், செம்மையை உறுதிப்படுத்தி சாட்சிக்காரரால் நீதிமன்றத்திற்கு செய்யப்பட்ட கூற்றை சாட்சிக்காரருக்கு வாசித்தல் அல்லது வாசிக்கச் செய்வித்தல் வேண்டும் என்பதுடன் பதிவு செய்யப்பட்ட விடயங்களின் உண்மையை சத்தியஞ்செய்யுமாறு அல்லது உறுதியுரை செய்யுமாறு சாட்சிக்காரரைத் தேவைப் படுத்துதலும் வேண்டும்.

(5) (அ) மறுபுறத்தில் சாட்சிக்காரர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவரிடம் செய்யப்பட்ட விசாரணையொன்றுக்கு மறுமொழியாக, கூற்று அதன் முழுமையில் அல்லது பகுதியளவில் தாம் பொலிசுக்கு கூறியிருந்ததன் செம்மையான பதிவொன்றல்ல எனக் கூறுவாராயின் நீதிவான், தவறு தொடர்பிலான சூழ்நிலைகளின் விபர விளக்கமொன்றைக் கொடுப்பதற்கு அல்லது விடயத்திற் கேற்ப சாட்சிக்காரர் செய்ய விரும்பக்கூடியவாறான அத்தகைய சேர்த்தல்களை அல்லது மாற்றங்களைச் செய்வதற்குச் சாட்சிக் காரரை அனுமதித்தல் வேண்டும்.

(ஆ) நீதிவான், குற்றஞ்சாட்டப்பட்டவரால் அல்லது அவரது வழக்குரைப்பவரால் சாட்சிக்காரர் குறுக்குவிசாரணை எதுவும் செய்யப்படுவதனை அனுமதித்தலாகாது. ஆனால், சாட்சிக்கார ரால் தரப்பட்ட விபர விளக்கத்திலிருந்து அல்லது செய்யப்பட்ட சேர்த்தல்களில் அல்லது மாற்றங்களிலிருந்து எழுகின்ற ஏதேனும் விடயம்பற்றிக் குற்றஞ்சாட்டப்பட்டவரால் அல்லது அவரது வழக்குரைப்பவரால் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் விளக்கத்தை நீதிவான் சாட்சிக்காரரிடம் கேட்கலாம் அல்லது அத்தகைய விடயம்பற்றி நீதிவான் தாமே தேவைப்படுத்தக்கூடிய ஏதேனும் விளக்கத்தைச் சாட்சிக்காரரிடம் கேட்கலாம் :

ஆயினும், சாட்சிக்காரர் ஒருவரால் பொலிசுக்கு அளிக்கப்பட்ட கூற்றில் அடங்கியுள்ள விடயத்தின் தன்மையைக் கருத்திற்கொண்டு வழக்குத்தொடுநர், குற்றஞ்சாட்டப்பட்டவரால் அல்லது அவரது வழக்குரைப்பவரால் குறுக்கு விசாரணை செய்யப்படுவதற்காகச் சாட்சிக்காரரை முன்நிறுத்தலாம்.

(இ) நீதிவான், (அ) என்னும் பந்தியின்கீழ் சாட்சிக்காரரால் தரப்பட்ட விபர விளக்கத்தையும் அல்லது செய்யப்பட்ட சேர்த்தல்களையும் அல்லது மாற்றங்களையும், (ஆ) என்னும் பந்தியின்கீழ் தரப்பட்ட எவையேனும் விளக்கங்களையும் பதிவுசெய்தல் வேண்டும் என்பதுடன் அவற்றைச் சாட்சிக்காரருக்கு வாசித்தலும் அல்லது வாசிக்கச் செய்வித்தலும் வேண்டும். அத்துடன் அவ்வாறு பதிவுசெய்யப்பட்ட விடயங்களின் உண்மை யைச் சத்தியஞ்செய்யுமாறு அல்லது உறுதியுரை செய்யுமாறு சாட்சிக்காரரைத் தேவைப்படுத்துதலும் வேண்டும்.

(6) குற்றஞ்சாட்டப்பட்டவருக்கெதிராக சாட்சிக்காரரொருவரை முன்நிறுத்துவதற்கு முன்னர், நீதிவான், புலனாய்வின்போது அந்தச் சாட்சிக்காரரால் பொலிசுக்கு அளிக்கப்பட்ட கூற்றைத் திறந்த நீதிமன்றத்தில் பார்வையிடுவதற்கு குற்றஞ்சாட்டப்பட்டவரை அல்லது அவரது வழக்குரைப்பவரை அனுமதித்தல் வேண்டும்.

(7) நீதிவான், புலனாய்வின்போது சாட்சிக்காரரால் பொலிசுக்கு அளிக்கப்பட்ட கூற்றின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றை ஒப்பமிடுதலும் சாட்சிக்காரரை ஒப்பமிடச் செய்தலும் வேண்டும் என்பதுடன், அதனைக் கோப்பிடச் செய்வித்தலும் வேண்டும். அவ்வாறு கோப்பிடப்பட்ட பிரதி எல்லா நோக்கங்களுக்காகவும் விசாரணைப் பதிவேட்டின் ஒரு பாகமாக அமைதல் வேண்டும்.

(8) நீதிவான் நிபுணச் சாட்சிக்காரர் ஒருவரையோ அல்லது பொலிசு அலுவலர் ஒருவரையோ கட்டளைவிட்டழைத்தலாகாது, ஆனால் விடயத்துக்கேற்ப அத்தகைய நிபுணச் சாட்சிக்காரரின் அறிக்கையை அல்லது அத்தகைய பொலிசு அலுவலரின் சத்தியக்கடதாசியை முன்வைக்கச் செய்வித்தலும் கோப்பிடச் செய்வித்தலும் வேண்டும்.

ஆயினும், நீதிவான் பதியப்படவேண்டிய காரணங்களுக்காகவும், நிபுணச் சாட்சிக்காரர் ஒருவரின் விடயத்திலும் சட்டத்துறைத் தலைமையதிபதியின் முன்சம்மதத்துடன் பரிசீலனைக்கென நீதிமன்றத்தில் சமுகமாயிருக்குமாறு நிபுணச் சாட்சிக்காரர் அல்லது பொலிசு அலுவலர் ஒருவரை ஆணையிட்டழைக்கலாம்.

(9) நிபுணச் சாட்சிக்காரர் அல்லது பொலிசு அலுவலர் ஒருவர் (8) ஆம் உட்பிரிவின் கீழ் அவருக்கு வழங்கப்பட்ட அழைப்பாணைக்கு மறுமொழியாக நீதிமன்றத்தில் தோன்றுமிடத்து நீதிவான் அத்தகைய நிபுணச் சாட்சிக்காரர் அல்லது பொலிசு அலுவலர் குற்றஞ்சாட்டப்பட்டவரால் அல்லது அவரது வழக்குரைப்பவரால் குறுக்குவிசாரணை செய்யப்பட அனுமதித்தலாகாது. ஆனால் விடயத்திற்கேற்ப நிபுணச் சாட்சிக்காரரின் அறிக்கையினின்று அல்லது பொலிசு அலுவலரின் சத்தியக் கடதாசியின்று அல்லது விடயத்திற்கேற்ப அத்தகைய நிபுணச் சாட்சிக்காரரின் அல்லது

பொலிசு அலுவலரின் பரிசோதனையினின்றெழும் ஏதேனும் விடயம் பற்றிய குற்றஞ்சாட்டப்பட்டவரால் அல்லது அவரது வழக்குரைப்பவரால் தேவைப்படுத்தப்பட்ட எவையேனும் விளக்கங்களை அத்தகைய நிபுணச் சாட்சிக்காரரிடம் அல்லது பொலிசு அலுவலரிடம் கேட்கலாம் என்பதுடன், அத்தகைய ஏதேனும் விடயம்பற்றி நீதிவான் தாமே தேவைப்படுத்தக்கூடிய ஏதேனும் விளக்கத்தைச் சாட்சிக்காரரிடம் கேட்கலாம். அவ்வாறு செய்யப்படும் விளக்கம் ஒவ்வொன்றும் பதியப்படுதல் வேண்டும்.

(10) நிபுணச் சாட்சிக்காரர் அல்லது பொலிசு அலுவலர் ஒருவரால் செய்யப்பட்ட கூற்றொன்றும் இப்பிரிவின்கீழ் குறுக்குவிசாரணைக்கென முன்நிறுத்தப்பட்ட சாட்சிக்காரர் ஒருவரால் செய்யப்பட்ட சத்தியத்தின்மீதான வாக்குமூலமும் (14 ஆம் அத்தியாயமான) சான்றுக் கட்டளைச் சட்டத்தின் 33 ஆம் பிரிவின் நியதிகளின்படி சாட்சியத்தில் ஏல்தகவுடையதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(11) (அ) குற்றஞ்சாட்டப்பட்டவர் –

(i) தலைமறைவாக இருக்குமிடத்து அல்லது நாட்டை விட்டுச் சென்றிருக்குமிடத்து ; அல்லது

(ii) சுகவீனம் காரணமாக நீதிமன்றத்திற்குச் சமுகமளிக்க, முடியாதிருக்குமிடத்து அல்லது அங்கு தொடர்ந்திருக்க முடியாதிருக்குமிடத்து அத்துடன் அவர் இல்லாமலேயே ஒன்றில் விசாரணையைத் தொடங்குவதற்கு அல்லது தொடர்ந்து நடத்துவதற்கு சம்மதமளித்திருக்கு மிடத்தும், அத்தகைய விசாரணை அவருக்குப் பங்கமெதுவுமின்றி தொடங்கப்படலாம் அல்லது தொடர்ந்து நடத்தப்படலாம் ; அல்லது

(iii) நீதிமன்றத்தில் அவரது நடத்தை காரணமாக விசாரணையின் முன்னேற்றத்தை தடைசெய்யு மிடத்து அல்லது தடுக்குமிடத்து,

நீதிவான் இந்நிகழ்வுகளையிட்டுத் திருப்திப்படுவாராயின் குற்றஞ் சாட்டப்பட்டவர் இல்லாமலேயே விசாரணையைத் தொடங்கலாம் தொடரலாம் அல்லது தொடர்ந்து நடத்தலாம்.

(ஆ) சட்டத்தரணியொருவர், சமுகமளிக்காத அத்தகைய குற்றஞ்சாட்டப்பட்டவருக்காகத் தோன்றலாம்.

(இ) மேல்நீதிமன்றத்தில் குற்றப்பகர்வொன்றின்மீது விசாரணையொன்று இருக்குமிடத்து குற்றஞ்சாட்டப்பட்டவர் மேல்நீதிமன்றத்தில் சமுகமாயிருப்பினுஞ்சரி இல்லாவிடினுஞ் சரி, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 416 ஆம் பிரிவு பதிவுசெய்யப்பட்ட சத்தியத்தின்மீதான வாக்குமூலம் ஏற்புடையதாதலாகாது என்பதைத் தவிர இயலுமானவரை விசாரணையானது இச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க முன்னெடுத்துச் செல்லப்படுதல் வேண்டும்.

(12) புலனாய்வின்போது சாட்சிக்காரர் ஒருவரால் பொலிசுக்குச் செய்யப்பட்ட கூற்று, விடயத்திற்கேற்ப (3) ஆம் உட்பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட விளக்கங்கள், எவையுமிருப்பின் அல்லது (4) உட்பிரிவின்கீழ்ச் செய்யப்பட்ட சேர்த்தல்கள், மாற்றங்கள், விளக்கங்கள் அல்லது (5) ஆம் உட்பிரிவின்கீழ்க் கொடுக்கப்பட்டதும் பதிவுசெய்யயப்பட்டதுமான விளக்க விபரம் என்பவற்றுடன்சேர்த்து இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அந்தச் சாட்சிக்காரரின் சத்தியத்தின்மீதான வாக்குமூலமாகக் கருதப்படுதல் வேண்டும்.

(13) விசாரணையில் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கெதிராக முன்நிறுத்தப்பட்ட சாட்சிக்காரர் ஒவ்வொருவரும் சட்டத்தரணியொருவரால் பிரதிநிதித்துப்படுத்தப்படுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(14) மேலே தரப்பட்ட நடவடிக்கை முறை முடிவுற்றதன் பின்னர், வழக்கு 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 153 ஆம் பிரிவிற்கிணங்கக் கையாளப்படவேண்டுமென நீதிவான் கருதாவிடில் நீதிவான், குற்றச்சாட்டை, குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு வாசித்து அதன் இயல்பைச் சாதாரண மொழியில் விளங்கப்படுத்துதலும் அத்துடன் சாட்சிகளை அழைப்பதற்கும் அவர் அவ்வாறு விரும்பினால் தமது சார்பில் சாட்சியமளிப்பதற்குமான உரிமையொன்று அவருக்குண்டு என அவருக்கு அறிவித்தலும் வேண்டும்.

(15) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் அத்தியாயம் XV இன் ஏற்பாடுகள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் நடாத்தப்படும் ஏதேனும் பூர்வாங்க விசாரணைக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

**7.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் 2007, மே மாதம் முப்பத்தோராம் தேதியிலிருந்து தொடங்குகின்ற இரண்டு ஆண்டுகளைக்கொண்டவொரு காலப்பகுதிக்கு நடைமுறையிலிருத்தல் வேண்டும். *சட்டத்தின் காலவெல்லை.*

(2) அமைச்சர், இச்சட்டம் நடைமுறையிலிருக்கும் காலப்பகுதி முடிவடைவதற்கு முன்னரான ஒரு மாத காலப்பகுதிக்குள் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையின்மூலம் சட்டத்தின் நடைமுறையை மேலும் ஒரு காலப்பகுதிக்கு நீடிக்கலாம் ; ஆயினும் ஏதேனும் ஒரு நீடிப்பின் கூட்டுமொத்தக் காலப்பகுதி வர்த்தமானியில் குறித்துரைக்கப்படுகின்றவாறு அத்தகைய நீடிப்பின் தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகளை விஞ்சுதலாகாது.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை பாராளுமன்றத்திற்கு அதன் அங்கீகாரத்திற்கென முன்வைக்கப்படுதல் வேண்டும்.

(4) கட்டளை பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள தேதியைக் குறித்துரைக்கும் அறிவிப்பொன்று வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

*செல்லுபடியாக்குதல்.*

**8.** இரண்டாயிரத்து ஏழாம் ஆண்டு மே மாதம் முப்பத்தோராம் நாளன்று தொடங்குகின்றதும் இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதியின்போது எந்தச் செயல் அல்லது காரியத்திற்காக இயலச்செய்கின்ற ஏற்பாடு இச்சட்டத்தின்கீழ் செய்யப்படுகின்றதோ அந்த ஏதேனும் செயல் அல்லது காரியம் செல்லுபடியானதாகச் செய்யப்பட்டுள்ளதெனக் கருதப்படுதல் வேண்டும்.

*ஒவ்வாமையின் விடயத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**9.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**அட்டவணை** (பிரிவு 2)

| நிரை I | நிரை II |
| --- | --- |
| 1. அட்டவணையில் தரப்பட்டுள்ள தவறொன்றுக்கு உடந்தையாயிருத்தல், உடந்தையளிக்கப்பட் செயல் புரியப்படின். | பிரிவு 102 – தண்டனைச் சட்டக்கோவை. |
| 2. அட்டவணையில் தரப்பட்டுள்ள ஏதேனும் தவறுக்கு உடந்தையளிக்க அல்லது தவறைப் புரிய சூழ்ச்சி செய்தல். | பிரிவு 113ஆ – தண்டனைச் சட்டக்கோவை. |
| 3. கொலை. | பிரிவு 296 – தண்டனைச் சட்டக்கோவை. |
| 4. கொலையாகாத குற்றமுடைய மரணம். | பிரிவு 297 – தண்டனைச் சட்டக்கோவை. |
| 5. கொலை முயற்சி. | பிரிவு 300 – தண்டனைச் சட்டக்கோவை. |

| | | |
|---|---|---|
| 6. | கொலை புரிவதற்காக ஆட்கவர்தல் அல்லது ஆட்கடத்தல். | பிரிவு 355 – தண்டனைச் சட்டக்கோவை. |
| 7. | ஆளொருவரை தவறாக அடைத்துவைக்கும் உளக் கருத்துடன் ஆட்கவர்தல் அல்லது ஆட்கடத்தல். | பிரிவு 356 – தண்டனைச் சட்டக்கோவை. |
| 8. | ஆளொருவரை முறைகேடாக கடுங்காயத்திற்கு உட்படுத்தும் உளக்கருத்துடன் ஆட்கவர்தல் அல்லது ஆட்கடத்தல். | பிரிவு 358 – தண்டனைச் சட்டக்கோவை. |
| 9. | கவர்ந்து செல்லப்பட்ட ஆளை மறைத்து வைத்தல் அல்லது அடைத்துவைத்தல். | பிரிவு 359 – தண்டனைச் சட்டக்கோவை. |
| 10. | கற்பழிப்பு. | பிரிவு 364 – தண்டனைச் சட்டக்கோவை. |
| 11. | மரணத்தை ஏற்படுத்துவதற்கு ஏற்பாடு முதலியன செய்துவிட்டு புரியப்படும் திருட்டு. | பிரிவு 371 – தண்டனைச் சட்டக்கோவை. |
| 12. | மரணம் அல்லது கடுங்காயம் விளைவிக்கும் முயற்சியில் கொள்ளை. | பிரிவு 383 – தண்டனைச் சட்டக்கோவை. |
| 13. | மரணம் விளைவிக்கக்கூடிய ஆயுதந்தாங்கிய படி கொலை முயற்சி. | பிரிவு 384 – தண்டனைச் சட்டக்கோவை. |
| 14. | மேற்கூறப்பட்ட எவையேனும் தவறுகளைப் புரியும் முயற்சி. | பிரிவு 490 – தண்டனைச் சட்டக்கோவை. |
| 15. | வெடிப்பொருட்களை, தீங்குவிளைவிக்கும் ஆயுதம் ஒன்றை அல்லது துவக்கொன்றைப் பயன்படுத்திப் புரியப்படும் தவறு. | வெடிபொருட்கள் என்பது (183 ஆம் அத்தியாயமான) வெடிபொருட்கள் சட்டத்தில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டவாறு ; தீங்குவிளைவிக்கும் ஆயுதம் 1966ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, தீங்குவிளைவிக்கும் ஆயுதங்கள் சட்டத்தில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டவாறு அத்துடன் துவக்கு என்பது, (182 ஆம் அத்தியாயமான) சுடுபடைக்கலங்கள் கட்டளைச் சட்டத்தில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டவாறு: |

ல்

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்